

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை



மனுக்கள் குழு

(2014 – 2015)

(பதினான்காவது பேரவை)

நாற்பத்து ஏழாவது அறிக்கை

06.09.2012 –ஆம் நாளன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பெற்று 2012–2013–ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழு 08.02.2013–ஆம் நாள் அன்று பேரவைக்கு அளித்த 18–வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது சம்பந்தப்பட்ட துறைகளால் மேலும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 2 SEP 2015)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2014 – 2015)

(பதினான்காவது பேரவை)

நாற்பத்து ஏழாவது அறிக்கை

06.09.2012 –ஆம் நாளன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பெற்று 2012–2013–ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழு 08.02.2013–ஆம் நாள் அன்று பேரவைக்கு அளித்த 18–வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது சம்பந்தப்பட்ட துறைகளால் மேலும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

		பக்கங்கள்
1.	**2014–2015–ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் அமைப்பு** -	iii
2.	**அறிக்கை** -	v
3.	**இணைப்பு** - I குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள் -	1 - 5
4.	**இணைப்பு** - II குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள் -	9 - 42
5.	**இணைப்பு** - III குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் -	45 - 57

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு (2014 – 2015)

(பதினான்காவது பேரவை)

(2014-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13-ஆம் நாள் நியமனம் செய்யப்பட்டது)

தலைவர்

திரு. ஆர். மனோகரன்
(அரசு தலைமைக் கொறடா)

உறுப்பினர்கள்

திரு. பா. கணேசன்

திரு. ஆர்.என். கிட்டுசாமி

திரு. கே. பொன்னுசாமி

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி

டாக்டர் த. ஹரிதாஸ்

\# திரு. அழகாபுரம் R. மோகன்ராஜ்

\# திரு. எல். வெங்கடேசன்

திரு. டி.ஆர்.பி. ராஜா

திரு. கே. உலகநாதன்

திரு. ஆ. ராமசாமி

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் : செயலாளர்

திரு. இரா. பழனிசாமி : இணைச் செயலாளர்

திரு. மு. கருணாநிதி : துணைச் செயலாளர்

19.2.2015 முதல் பேரவைப் பணிகளிலிருந்து தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டுள்ளனர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – I

குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – I

குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)	குழுவின் பரிந்துரை (6)
1.	1464	திரு. எ. மார்டின் ஜெகதீசன், பெரியகுளத்துப்பட்டி, பொத்தப்பட்டி அஞ்சல், இளங்காகுறிச்சி வழி, மணப்பாறை, திருச்சிராப்பள்ளி வட்டம். துறையின் பதிலுரை (5)	தவளவீரன்பட்டி ஊராட்சி நடுப்பட்டியில் சாலை வசதி கோரியது. வையம்பட்டி ஊராட்சி ஒன்றியம் தவளவீரன்பட்டி ஊராட்சி தொப்பாகவுண்டனூர் முதல் வீரமலைப்பட்டி வரை (நடுப்பட்டி வழி) தார்சாலை அமைக்கும் பணி PMGSY Phase-VIII திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டு, ரூ.38.30 இலட்சத்தில் விரிவான மதிப்பீட்டுடன் கூடிய திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு ஊரக வளர்ச்சி ஆணையர் அவர்கள் மூலம் மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. பணிக்கான நிர்வாக அனுமதி பெறப்பட்டவுடன் பணியானது துவக்கப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், வையம்பட்டி கடித நக.ஆ3/1221/2011 நாள்:02.08.2012)	திருச்சிராப்பள்ளி மாவட்டம், வையம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தவளவீரன்பட்டி ஊராட்சி தொப்பாகவுண்டனூர் முதல் வீரமலைப்பட்டி வரை தார்சாலை அமைக்க குழு பரிந்துரை செய்கிறது.

		துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
		(7)	(8)
		இச்சாலையில் 6 சிறுபாலம் மற்றும் தடுப்புச்சுவர் பணி முடிவுற்றது. மேலும், சாலையில் மண் வேலையும் முடிவுற்றது. BaseCourse (GSP) பணி முடிவுற்றது. மெட்டல் சேகரிக்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. (வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) வையம்பட்டி அவர்களின் கடித எண்.நக.அ3/368/2013/நாள்:14.02.2014)	விரைவில் பணியினை முடித்து அறிக்கை அளிக்க வையம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2.	1469	பொதுமக்கள் சார்பில் ஆனந்த குமார் மற்றும் கந்தசாமி காவேரி மற்றும் மாருதி நகர் குடியிருப்போர் நலச் சங்கம், காவேரி மற்றும் மாருதி நகர் மேலகல்கண்டார் கோட்டை, திருச்சிராப்பள்ளி–620 011.	தார்சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி வேண்டுவது தொடர்பாக.

	துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
	(5)	(6)
	வார்டு எண்.30–க்கு உட்பட்ட காவேரி நகர் மற்றும் மாருதி நகர் பகுதிகளில் 2013–2014–ஆம் நிதியாண்டில் தார்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், மழைநீர் வடிகால் அமைக்க TNUFISL நிறுவனத்தின் மூலமாக ஒரு கலந்தாலோசகர் நியமித்து பணிகள் மேற்கொள்ள ஆய்வுப்பணிகள் துவங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகள் வரும் நிதியாண்டு 2013–2014–இல் மேற்கொள்ள இயலும். (ஆணையர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கடிதம் எண். ந.க.10689/2011/இ1(பொன்) நாள்: 01.12.2011)	திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட காவேரி நகர் மற்றும் மாருதி நகர் பகுதியில் தார்சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதியினை செய்து தர குழு பரிந்துரை செய்கிறது.

		துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
		(7)	(8)
		வார்டு எண்.30க்கு உட்பட்ட காவேரி நகர் 2ம் தெரு பகுதிக்கு IUDM Phase I திட்டத்தில் மழைநீர் வடிகால் கட்டும் பணி 08.08.2014ல் செய்து முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் காவேரி நகர் 1ம் தெருவில் மழைநீர் வடிகால் கட்டுவதற்கு மதிப்பீடுகள் தயார் செய்து 24.03.2015ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. விரைவில் பணி துவங்கப்படும். மாருதி நகர் பகுதிக்கு வரும் நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். (ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களின் கடித எண்.10689/2011/இ1(பொன்) நாள்: 06.04.2015)	பணிகளை இந்த நிதியாண்டிற்குள் முடிக்க வேண்டும் என திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3.	1521	ஊர் பொதுமக்கள் சார்பாக, எஸ். சின்னதுரை, த/பெ. லேட் சவரிமுத்து, 5/12, படுகை, எடமலைப்பட்டிபுதூர் அஞ்சல், திருச்சிராப்பள்ளி.	தார்சாலை வசதி வேண்டுதல்.

	துறையின் பதிலுரை
	(5)
	செட்டியப்பட்டி சாலை பணிக்காக மதிப்பீடு ரூ.16.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, ஆணையர் அவர்களின் ஒப்புதல் செய்யப்பட்டு நிர்வாக அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

துறையின் பதிலுரை தொடர்ச்சி	குழுவின் பரிந்துரை
(5)	(6)
அனுமதி பெறப்பட்டவுடன் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு பணி துவங்கப்படும். (ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கடிதம் எண் ந.க.10701/2011/இ1, (பொன்), நாள்: 1–12–2011)	மழையினால் சேதமடைந்த செட்டியப்பட்டி சாலையின் இருபுறத்தையும் பழுது நீக்க தொடர்நடவடிக்கை மேற்கொள்ள குழு பரிந்துரை செய்கிறது.
துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(7)	(8)
செட்டியப்பட்டி சாலை சமீபத்தில் பெய்த மழையினால் சாலையின் இருபுறமும் சேதமடைந்து உடைந்துள்ளது. அதனை மேம்படுத்த திருத்திய மதிப்பீடு ரூ.25.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது. (ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களின் கடித எண்.10701/2011/இ1 (பொன்) நாள்: 06.04.2015)	பணியினை விரைந்து செய்து முடிக்க திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் ஆணையர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
4.	1529	டாக்டர் கே. ஞானதாஸ், மெர்சி ஆர்க் சர்ச் இந்தியா, போஸ்ட் பாக்ஸ் நெ.715, 54, மதுரம் காலனி, புத்தூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	மெர்சி ஆர்க் சர்ச் இந்தியா சபையின் அங்கத்தினர்கள் யாரேனும் இறந்து போனால் அவர்களை அடக்கம் செய்ய இடம் கோருவது தொடர்பாக.

துறையின் பதிலுரை

(5)

புத்தூர் உறையூர் மற்றும் மேலபாண்டமங்கலம் பகுதியில் அரசு நத்தம் புறம்போக்கு ஏதுமில்லை.

(மாநகராட்சி ஆணையர், திருச்சிராப்பள்ளி கடித எண். இ1/ 9706/2012 (கோ.அபி) 25-07-2012)

துறையின் பதிலுரை

(7)

புத்தூர், உறையூர் மற்றும் மேலபாண்டமங்கலம் பகுதியில் அரசு நத்தம் புறம்போக்கு ஏதுமில்லை.

(ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களின் கடித எண்.இ1/9706/2012 (கோ.அபி) நாள்: 06.04.2015)

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் கோரிக்கை குறித்து வட்டாட்சியர் அவர்கள் இடத்தினை ஆய்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிக்கை அனுப்பி வைக்குமாறும் இம்மனு மீதான தொடர் நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கை அனுப்பி வைக்குமாறும் மாநகராட்சி ஆணையருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

குழுவின் பரிந்துரை

(8)

விரைவில் நடவடிக்கை எடுக்க திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



இணைப்பு – II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)	குழுவின் பரிந்துரை (6)
1.	1459	திரு. பி. சுப்பிரமணியன், கிளைச் செயலாளர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), தலைமலை நால்ரோடு நீலியம்பட்டி அஞ்சல், முசிறி வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	அஞ்சலம் கிராமம், நீலியம்பட்டி குக்கிராமம், சர்வே எண்.131–ல் உள்ள ஏரியை தூர்வாரி கரையை உயர்த்தி புனரமைப்பு செய்யக் கோருதல்.	திருச்சி மாவட்டம் அஞ்சலம் கிராமம் நீலியம்பட்டி குக்கிராமம் சர்வே எண்.131–இல் உள்ள ஏரியை தூர்வாரி கரையை உயர்த்தி புனரமைப்பு செய்ய குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(5)

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம் தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியம், அஞ்சலம் கிராமம், நீலியம்பட்டி குக்கிராமம், சர்வே எண்.131–ல் உள்ள ஏரியை தூர்வாரி கரையை உயர்த்தி புனரமைப்பு செய்வதற்கான கருத்துரு மதிப்பீடு செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை, நீர்வள ஆதாரங்கள் அமைப்பு திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்டம், திருச்சி–1 அவர்களால் தயாரிக்கப்பட்டு, இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளது. மேலும், இம்மதிப்பீடு மறு ஆய்வு செய்து நடப்பாண்டு (2012–2013) விலை விவர அட்டவணையின்படி ரூ.89 இலட்சத்திற்கு திருத்தியமைக்கப்பட்டு, இப்பணியை நபார்டு திட்டத்தின்கீழ் செயல்படுத்திட அரசின் ஒப்புதல் வேண்டி தலைமைப் பொறியாளர், பொதுப்பணித் துறை நீர்வள ஆதாரங்கள் அமைப்பு திட்ட உருவாக்கம், சென்னை–5 அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை நீர்வள ஆதாரங்கள் அமைப்பு அரியாறு வடிநில கோட்டம், திருச்சி கடித எண்.வ–3/ கோ–79 / 35 SE / நாள்: 31–7–2012)

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் விதி எண்.110ன் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியம், அஞ்சலம் கிராமம், நீலயம்பட்டி குக்கிராமம் சர்வே எண்.131ல் உள்ள ஏரியை தூர்வாரி கரையை உயர்த்தி புனரமைப்பு செய்வதற்கான திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இப்பணிக்கான விரிவான மதிப்பீடு நபார்டு வங்கி நிதியுதவியின் கீழ் மேற்கொள்ள ரூ.63 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு அரசுக்கு சமர்பிக்கப்பட்டு அரசாணை எதிர்நோக்கப்படுகிறது. உரிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் இப்பணி நிறைவேற்றப்பட உள்ளது. (செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை, நீர்வள ஆதாரங்கள் அமைப்பு அரியாறு வடிநில கோட்டம், திருச்சி அவர்களின் கடித எண்.வ–1/கோ. மனுக்கள் குழு/2015/எம்/நாள்: 06.04.2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2.	1460	திரு. ரா. பாலச்சந்திரன், நாகநல்லூர் அஞ்சல், துறையூர் வட்டம், திருச்சி மாவட்டம்.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், நாகநல்லூர் கிராமத்தில் (கொப்பம்பட்டி புதூர் ஏரி) உள்ள ஏரியை தூர்வாரியும் ஏரியின் உட்பகுதியில் உள்ள மரங்களை அகற்றியும், கரையை பலப்படுத்தியும் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், நாகநல்லூர் கிராமத்தில் (கொப்பம்பட்டி புதூர் ஏரி) உள்ள ஏரியை தூர்வாரியும், அதன் கரையை பலப்படுத்த தோராயமாக ரூ.102.99 இலட்சத்திற்கான கருத்துருக்கள் செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை நீர்வள ஆதாரங்கள் அமைப்பு அரியாறு வடிநில கோட்டம், திருச்சி அவர்களது கடித எண்.D-3/F-64/2011/271M/ நாள்: 11.11.2011–ல் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசிடமிருந்து நிருவாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை, நீர்வள ஆதாரங்கள் அமைப்பு அரியாறு வடிநில கோட்டம், திருச்சி அவர்களின் கடித எண் வ–3/ கோ–32/2012 நாள்: 02–08–2012)

துறையின் பதிலுரை

(7)

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் விதி எண்.110ன் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், நாகநல்லூர் கிராமத்தில் (கொப்பம்பட்டி புதூர் ஏரி) உள்ள ஏரியை தூர்வாரி, ஏரியின் உட்பகுதியில் உள்ள மரங்களை அகற்றி கரையினைப் பலப்படுத்தும் பணிக்கான திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இப்பணிக்கான விரிவான மதிப்பீடு நபார்டு வங்கி நிதியுதவியின் கீழ் மேற்கொள்ள ரூ.95 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு அரசுக்கு சமர்பிக்கப்பட்டு அரசாணை எதிர்நோக்கப்படுகிறது. உரிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் இப்பணி நிறைவேற்றப்பட உள்ளது.

(செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை நீர்வள ஆதாரங்கள் அமைப்பு அரியாறு வடிநில கோட்டம், திருச்சி அவர்களின் கடித எண்.வ–1/கோ.மனுக்கள் குழு/2015/எம்/நாள்: 06.04.2015)

குழுவின் பரிந்துரை

(6)

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், நாகநல்லூர் கிராமத்தில் (கொப்பம்பட்டி புதூர் ஏரி) உள்ள ஏரியை தூர்வாரியும், ஏரியின் உட்பகுதியில் உள்ள மரங்களை அகற்றியும், கரையை பலப்படுத்தி தர IAMWARM திட்ட நிதியைக் கொண்டு நிறைவேற்ற குழு பரிந்துரை செய்யப்படுகிறது.

குழுவின் குறிப்புரை

(8)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
3.	1461	திரு. எஸ். ராஜீ. த/பெ எம். சின்னையா உடையார், 4/202, அய்யனார் கோவில் தெரு, மணிகண்டம், கள்ளிக்குடி ஊராட்சி, திருச்சிராப்பள்ளி–620 012.	கோ. கள்ளிக்குடி ஊராட்சியில் அளுந்தூர் – கொத்தமங்கலம் வாரியை மணிகண்டம் பெரிய குளத்தின் மேற்கு கலிங்கு முதல் திருச்சி மாநகராட்சி பகுதியான கொத்தமங்கலம் வரை தூர்வார நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுதல் குறித்து.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரங்கம் வட்டம், மணிகண்டம் ஒன்றியத்தில் உள்ள கொத்தமங்கலம் வாரியானது அளுந்தூர் கிராமத்தில் உள்ள அளுந்தூர் பெரிய ஏரியின் உபரிநீர் சறுக்கையிலிருந்து தொடங்கி கொத்தமங்கலம் பெரிய ஏரிக்கு பாய்ந்தளிப்பதோடு பாகனூர், முடிகண்டம், பஞ்சப்பூர், நாகமங்கலம், மணிகண்டம், கொத்தமங்கலம் ஆகிய கிராமங்களுக்கு வடிகால் வாரியாகவும் செயல்படுகிறது. இதன் மொத்த தூரம் 15 கி.மீ ஆகும். இதில் 7 கி.மீ ஏற்கனவே நிதி நிலைமைக்கெற்ப தூர்வாரப்பட்டது. தற்போது மீதமுள்ள 8 கி.மீ தூரத்தினை தூர்வாரிட ரூ.98.00 இலட்சங்களுக்கு மதிப்பீடு செய்து உரிய நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பட்டவுடன் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். (செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை நீர்வள ஆதாரங்கள் அமைப்பு அரியாறு வடிநில கோட்டம், திருச்சி அவர்களின் கடித எண்.கொ.90/2012 நாள்: 23.8.2012)	திருச்சிராப்பள்ளி மாவட்டம் கோ.கள்ளிக்குடி ஊராட்சியில் அளுந்தூர் கொத்தமங்கலம் வாரியை மணிகண்டம் பெரிய குளத்தின் மேற்கு கலிங்கு முதல் திருச்சி மாநகராட்சி பகுதியான கொத்தமங்கலம் வரை தூர்வார 100 நாள் வேலை திட்டம் அல்லது IAMWARM திட்டத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் விதி எண்.110ன் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரங்கம் வட்டம், மணிகண்டம் ஒன்றியத்தில் உள்ள கொத்தமங்கலம் வாரியை தூர்வாரும் பணிக்கான திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இப்பணிக்கான விரிவான மதிப்பீடு நபார்டு வங்கி நிதியுதவியின் கீழ் மேற்கொள்ள ரூ.150 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு அரசுக்கு சமர்பிக்கப்பட்டு அரசாணை எதிர் நோக்கப்படுகிறது. உரிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் இப்பணி நிறைவேற்றப்பட உள்ளது. (செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை நீர்வள ஆதாரங்கள் அமைப்பு அரியாறு வடிநில கோட்டம், திருச்சி அவர்களின் கடித எண்.வ–1/கோ. மனுக்கள் குழு/2015/எம்/நாள்: 06.04.2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
4.	1462	திரு. வை. தியாகராஜன், தலைவர், மறுமலர்ச்சி மன்றம், 26/18, திருவள்ளுவர் தெரு, அய்யப்ப நகர், திருச்சிராப்பள்ளி–620 021.	மழைநீர் வடிகால் வசதி கோருவது தொடர்பாக.

துறையின் பதிலுரை

(5)

வார்டு எண்.38, அய்யப்ப நகரில் மொத்தம் உள்ள 41 தெருக்களிலிருந்து வரும் கழிவு நீர் மற்றும் மழைநீர் இதுநாள் வரை அமராவதி தெருவில், இரயில்வே லைனில் உள்ள சிறு பாலம் வழியே சென்று கொண்டிருக்கிறது. மாநகர அளவில் ஒட்டுமொத்த பகுதிக்கும் விடுபட்டுள்ள 600 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் வசதிகள் ஏற்படுத்த TNUFISL நிறுவனத்தின் மூலம் ஒரு கலந்தாலோசகர் நியமித்து பணிகள் மேற்கொள்ள ஆய்வுப்பணிகள் துவங்கப்படவுள்ளது. இதில் இப்பகுதி முழுமைக்கும் வடிகால் வசதி ஏற்படுத்தித் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கடிதம் எண். நக.10688/2011/இ1(பொன்) நாள்: 01.12.2011)

குழுவின் பரிந்துரை

(6)

திருச்சிராப்பள்ளி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.38 அய்யப்ப நகரில் உள்ள 41 தெருக்களில் மழைநீர் வடிகால் வசதி அடுத்த ஆண்டுக்குள் செய்து தர குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(7)

வார்டு எண்.38, அய்யப்ப நகரில் மொத்தம் உள்ள 41 தெருக்களிலிருந்து வரும் நீர் மற்றும் மழைநீர் இது நாள் வரை அமராவதி தெருவில், இரயில்வே லைனில் உள்ள சிறு பாலம் வழியே சென்று கொண்டிருக்கிறது. மாநகர அளவில் ஒட்டுமொத்த பகுதிக்கும் விடுபட்டுள்ள 600கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால் வசதிகள் ஏற்படுத்த Ms Wilbursmith Associates Pvt Ltd மூலம் ரூ.1300.00 கோடி மதிப்பீட்டில் பிரேரணை தயார் செய்யப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது. இதில் இப்பகுதி முழுமைக்கும் வடிகால் வசதி ஏற்படுத்தித்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆணையர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அவர்களின் கடித எண். 10688/2011/இ1 (பொன்) நாள்: 06.04.2015)

குழுவின் குறிப்புரை

(8)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
5.	1466	திரு. து. சத்தியமூர்த்தி, த/பெ. துரைராஜ், கீழசாலப்பட்டி, H/O. அப்பணநல்லூர், அம்மன்குடி அஞ்சல், தொட்டியம் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்–621 208.	தொட்டியம் ஊராட்சி ஒன்றியம், அப்பணநல்லூர் ஊராட்சி சாலப்பட்டி முதல் பாப்பாப்பட்டி செல்லும் காற்றாற்றில் பாலம் கட்டுதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
தொட்டியம் ஊராட்சி ஒன்றியம், அப்பணநல்லூர் ஊராட்சியைச் சேர்ந்தது சாலப்பட்டி கிராமமாகும். தா.பேட்டை ஊராட்சி ஒன்றியம் பூலாஞ்சேரி ஊராட்சியை சேர்ந்தது பாப்பாப்பட்டி கிராமமாகும். இவ்விரு கிராமங்களுக்கு இடையில் உள்ள அப்பணநல்லூர் குளத்திற்கு மழைக்காலத்தில் மட்டுமே மழை செல்வதற்காக, குளத்துவாரி செல்கிறது. மேற்படி சாலப்பட்டியில் சுமார் 450 மக்கள் தொகை மட்டுமே உள்ளனர். இம்மக்களுக்கு சாலப்பட்டியிலிருந்து பாப்பாப்பட்டி செல்ல மேலக்கொட்டம் வழியாக நகரப்பேருந்து இயங்கி வருகிறது. பாப்பாப்பட்டியிலிருந்து மேலக்கொட்டம் பூலாஞ்சேரி ஊராட்சி வரை PMSGY திட்டத்தில் இணைப்பு தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது. எனவே பாப்பாப்பட்டியிலிருந்து சாலப்பட்டிக்கும் சாலப்பட்டியிலிருந்து பாப்பாப்பட்டிக்கும் மேலக்கொட்டம் வழியாக சுமார் 3.50 கி.மீ நீளத்திற்கு தார்சாலை நல்ல நிலையில் மக்களின் பயன்பாட்டில் உள்ளது. இதில் அரசு நகரப்பேருந்து இயங்கி வருவதால் பாப்பாப்பட்டிக்கும் சாலப்பட்டிக்கும் இடையில் தனியாக பாலம் அமைக்க தேவையில்லை. (வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், தொட்டியம் கடித எண். ந.க. அ6 / 1496 / 2010, நாள்: 25.7.2012)	தொட்டியம் ஊராட்சி ஒன்றியம் அப்பணநல்லூர் ஊராட்சி சாலப்பட்டி முதல் பாப்பாப்பட்டி செல்லும் காற்றாற்றில் பாலம் கட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் மனுக்கள் குழு 2012–2013, 18–வது அறிக்கை உள்ள குழுவின் பரிந்துரை செய்த சாலப்பட்டி முதல் பாப்பாப்பட்டி செல்லும் காற்றாற்றில் பாலம் கட்ட ஒன்றியப் பொறியாளரால் பார்வையிடப்பட்டு தோராய மதிப்பீடு ரூ.150 இலட்சம் என பரிந்துரை செய்துள்ளார். ஆனால் அப்பகுதியில் தற்பொழுது கடுமையான வறட்சி நிலவி வருவதால் அவசர அவசியத்தை முன்னிட்டு போர்கால அடிப்படையில் குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, ஒன்றிய பொது நிதியில் மேற்படி பணியை எடுத்து செய்வதற்கு போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால் மேற்படி நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், தாத்தையங்கார்பேட்டை அவர்களின் கடித எண். ந.க. அ5 /1089/ 2013 நாள்:06.04.2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6.	1471	திரு. தி. நவநீதன், Volunteer, 1/1, அல்லூர், திருச்சிராப்பள்ளி–620 010.	ஸ்ரீரங்கம் வட்டம் அல்லூர் கிராமம் நத்தம் புல எண்.243/3 உள்ள கால்நடை பட்டியை தூய்மை செய்தும், சுற்றுசுவர் அமைத்து தரக்கோரியது தொடர்பாக.

துறையின் பதிலுரை

(5)

ஸ்ரீரங்கம் வட்டம், அல்லூர் கிராமம் நத்தம் புல எண்.243/3, (பழைய புல எண்.66–1) நத்தம் நிலவரித்திட்ட அடங்கல் பதிவேட்டின்படி சர்க்கார் பவுண்டு என வகைபாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புல எண்ணில் அமைந்துள்ள கால்நடைபட்டி 26.7.2012 அன்று முட்புதர் அகற்றப்பட்டு தூய்மை செய்யப்பட்டது. மேலும், சுற்றுசுவரை சீரமைத்து தரக்கோரி இவ்வலுவலக கடிதம் எண்.ந.க.ஆ4–4441–2012, நாள்: 24.7.2012–ல் செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை (பராமரிப்பு மற்றும் கட்டுமானம்), திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

(ஸ்ரீரங்கம் வட்டாட்சியரின் கடிதம் எண். ந.க.ஆ4–4441/2012, நாள்: 27.7.2012)

குழுவின் பரிந்துரை

(6)

ஸ்ரீரங்கம் வட்டம் அல்லூர் கிராமம் நத்தம் புல எண்.243/3 உள்ள கால்நடை பட்டியை தூய்மை செய்து சுற்றுசுவர் அமைத்துத் தர குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(7)

ஸ்ரீரங்கம் வட்டம், அல்லூர் கிராமம் நத்தம் புலஎண்.243/3 (பழைய புல எண்.66–1ல்) அமைந்துள்ள கால்நடைப்பட்டி சுற்றுப்புற சுவரை சீரமைப்பதற்கு ஒப்புதலும் ரூ.2.541 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடும் பெற்று அறிக்கை தருமாறு அனுப்பப்பட்டுள்ளது.

(ஸ்ரீரங்கம் வட்டாட்சியர் அவர்களின் கடித எண்.ந.க.எண்.ஆ4–2669–2014 நாள்: 06.04.2015)

குழுவின் குறிப்புரை

(8)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
7.	1474	திருமதி ஆர். கயல்விழி, க/பெ. ரவி, ஜோதிமலர் சுய உதவிக்குழு, வீரபுரம் தெரு, வரதராஜபுரம் அஞ்சல், துறையூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	வீரபுரம் தெருவில் சுகாதார வளாகம் வசதி கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

வரதராஜபுரம் ஊராட்சியில் மொத்தம் 2055 வீடுகள் உள்ளன. இவ்வூராட்சியில் 2005–ஆம் ஆண்டு மகளிர் சுகாதார வளாகம் கட்டப்பட்டன. மேலும், 2011–2012–ஆம் ஆண்டு இந்த சுகாதார வளாகம் மின்வசதி, தண்ணீர் வசதி, நடைபாதை ஆகியவைகள் புதுப்பிக்கப்பட்டு நல்ல நிலையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஊராட்சிக்கு ஒரு மகளிர் சுகாதார வளாகம் அமைக்க அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. அதன்படி அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

(வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், துறையூர் கடிதம் எண். ந.க. அ3–3000/ 2011, நாள்:27.8.2012)

குழுவின் பரிந்துரை

(6)

திருச்சிராப்பள்ளி மாவட்டம் வரதராஜபுரம் ஊராட்சி வீரபுரம் தெருவில் சுகாதார வளாக வசதியினை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதிப்பெற்று பணியினை நிறைவேற்ற குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(7)

துறையூர் ஊராட்சி ஒன்றியம் வரதராஜபுரம் ஊராட்சி வீரபுரம் தெருவில் சுகாதார வளாக வசதிகள் செய்திட அரசின் கொள்கையின்படி ஒரு ஊராட்சிக்கு ஒன்று என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.

துறையின் பதிலுரை தொடர்ச்சி	குழுவின் குறிப்புரை
(7)	(8)
மேலும் நிர்மல் பாரத் அபியான் திட்டத்தில் தனிநபர் கழிவறை அனைத்து வீடுகளுக்கும் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. (வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.உ) ஊராட்சி ஒன்றியம் துறையூர் அவர்களின் கூடித எண்.ந.க.அ3/1307/2013 நாள்:06.04.2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
8.	1488	திரு. கே. எஸ். பாஸ்கர், அர்ஜூனன் நகர், மேலக்கல்கண்டார் கோட்டை, திருச்சிராப்பள்ளி–620 011.	மேலக்கல்கண்டார் கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்திட கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மேலக்கல்கண்டார் கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளியினை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்திட முதன்மைக் கல்வி அலுவலகம் சார்பில் சம்மந்தப்பட்ட தலைமை ஆசிரியரிடம் கருத்துருக்கள் கோரப்பட்டது. பொதுமக்கள் பங்களிப்பாக ரூபாய் இரண்டு இலட்சம் செலுத்த வேண்டுமென பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களிடம் தெரிவிக்கப்பட்டது.

துறையின் பதிலுரை தொடர்ச்சி	குழுவின் பரிந்துரை
(5)	(6)
இது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தனர். அவர்களின் உறுதிமொழிக்கிணங்க பொதுமக்கள் பங்களிப்பு பெறப்பட்டவுடன், உரிய கருத்துக்கள் பணிந்தனுப்பப்படும் என மேலக்கல்கண்டார்கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் தனது கடிதம் ந.க. எண் 40–2012, நாள்: 26–7–2012–ல் தெரிவித்துள்ளார், உரிய கருத்துருக்கள் மேலக்கல்கண்டார்கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்பட்டவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (முதன்மைக் கல்வி அலுவலர் திருச்சிராப்பள்ளி கடிதம் ந.க.14585.அ3.2011, நாள்:26.7.2012)	திருச்சிராப்பள்ளி மாவட்டம், மேலக்கல்கண்டார் கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளிளை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்திட இந்த ஆண்டே நடவடிக்கை மேற்கொள்ள குழு பரிந்துரை செய்கிறது.
துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
திருச்சிராப்பள்ளி மாவட்டம், மேலக்கல்கண்டார் கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளியினை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்திட தலைமையாசிரியரிடமிருந்து கருத்துரு 05.12.2013 அன்று பெறப்பட்டு பரிந்துரை செய்து பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (முதன்மைக் கல்வி அலுவலர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க. 8914– ஆ2 – 2011 நாள்: 06.04.2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
9.	1490	திரு. மு. வரதராஜன், தலைவர், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு பகுதி, செம்புளிச்சான்பட்டி அஞ்சல், துறையூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	வண்ணாடு ஊராட்சியில் கிணத்தூர் முதல் நெசக்குளம் வரை சுமார் 5 கி.மீட்டருக்கு சாலை வசதி மற்றும் குறிச்சி பிரிவு முதல் தேன்பாடி வரை சுமார் 5 கி.மீட்டருக்கு சாலை வசதி கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
வண்ணாடு ஊராட்சியில் கிணத்தூர் முதல் நெசக்குளம் வரை சுமார் 5 கி. மீட்டர் நீளம் உள்ள சாலை தற்பொழுது மண்சாலையாக உள்ளது. இச்சாலை 3 கிராமங்களை இணைக்கும் இணைப்பு சாலையாகும். இச்சாலையை தார் சாலையாக மேம்பாடு செய்திட PMGSY Part 8 திட்டத்தின் கீழ் 98.75 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து கருத்துருவாக சென்னை ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வண்ணாடு ஊராட்சியில் குறிச்சி பிரிவு முதல் தேன்பாடி வரை உள்ள 2.1. கி.மீ சாலை NABARD திட்டத்தின் கீழ் 41.20 இலட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி தற்பொழுது பணி நடைபெற்று வருகிறது. (வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், துறையூர் கடிதம் எண். ந.க. அ3 – 3000 –2011, நாள்: 27–8–2012)	திருச்சிராப்பள்ளி மாவட்டம் வண்ணாடு ஊராட்சியில் கிணத்தூர் முதல் நெசக்குளம் வரை மற்றும் குறிச்சி பிரிவு முதல் தேன்பாடி வரை முறையே சுமார் 5 கி. மீட்டருக்கு சாலை வசதி செய்து தர குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
10.	1491	திரு. கா. தமிழரசு, எம்.ஏ., பாண்டியபுரம், துடையூர் அஞ்சல், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	பிச்சாண்டார் கோயில் ஊராட்சி திருவள்ளுவர் அவென்யூ சாலையினை தார்சாலை KM0/0-2/0 அமைப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டத்தின் கீழ், தோராயமாக ரூ.25.6 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்க பெற்ற உடன் தார்சாலை அமைத்துத் தரப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், மண்ணச்சநல்லூர் கடிதம் எண் ந.க.அ2-3105-2011, நாள்: 31-7-2012)	பிச்சாண்டார் கோயில் ஊராட்சி திருவள்ளுவர் அவென்யூ சாலையினை தார்ச்சாலையாக மாற்றித்தர பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு பெற்று நிறைவேற்ற குழு பரிந்துரை செய்கிறது.

மனுவின் சுருக்கம் (4)	துறையின் பதிலுரை (7)	குழுவின் குறிப்புரை (8)
பிச்சாண்டார் கோயில் ஊராட்சி திருவள்ளுவர் அவென்யூ சாலையினை தார் சாலையாக மாற்றி தர கோருதல்.	குறிச்சி பிரிவு முதல் தேன்பாடி வரை சுமார் 2 கி.மீட்டருக்கு சாலை வசதி நபார்டு திட்டம் 2012-2013 மூலம் பணி முடிவுற்றது. தற்போது கிணத்தூர் சிலையூர், நெசக்குளம், சாலைப்பணிகள் ரூ.129.00 இலட்சம் மதிப்பீட்டில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெற்று வருகிறது. (வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.ஊ) ஊராட்சி ஒன்றியம், துறையூர் அவர்களின் கடிதம் எண்.ந.க.அ3-1307-2013 நாள்: 06.04.2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம் பிச்சாண்டார் கோவில் ஊராட்சி திருவள்ளுவர் அவென்யூ சாலை ரூ.4.05 இலட்சம் மதிப்பீட்டில் 227 மீட்டர் நீளம் மற்றும் 3.75 மீட்டர் அகலத்தில் அ2-1775-2013ன் வழி மாவட்ட ஊராட்சி நிதியிலிருந்து 396 மீட்டர் அ2-1859-2011ன் வழி ஒன்றிய பொதுநிதியிலிருந்தும் மொத்தம் 623 மீட்டரில் அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1094 மீட்டர் சாலை அமைப்பதற்கு ஊராட்சி ஒன்றிய சாலைகள் மேம்பாடு செய்யும் திட்டத்தின் கீழ் அ3-2375-2014 நாள் 18.07.2014ன் வழி கருத்துரு திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருச்சிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது தவிர ரூ.5 கோடி மதிப்பீட்டில் State insfrastructure Amenities Fund திட்டத்தின் கீழ் பிச்சாண்டார் கோவில் ஊராட்சி மெயின் வீதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் மற்றும் ஊராட்சி சாலைகளை தார்சாலைகளாக அமைக்கும் பணி (திருவள்ளுவர் அவென்யூ) மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. பணிகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.ஊ) ஊராட்சி ஒன்றியம், மண்ணச்சநல்லூர் அவர்களின் கடிதம் எண். ந.க. அ3-5041/2013, நாள்: 06.04.2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
11.	1498	திரு. கே. பெருமாள், 49–சி, மாருதி வசந்த நகர், கரட்டுமலை பின்புறம், துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	துறையூர் நகராட்சி வார்டு 19 திருச்சி ரோடு கரட்டு மலைக்கு நேர் பின்புறம் ஆஞ்சநேயர் கோவில் எதிரில் மாருதி நகருக்கு செல்லும் ரோட்டுக்கு வடபுறம் மாருதி வசந்த நகரில் கழிவுநீர் வெளியேறும் வகையில் வாய்க்கால் கட்டித் தரக் கோருவது குறித்து.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
துறையூர் நகராட்சி வார்டு 19 மாருதி நகரில் பிரதான மழைநீர் வடிகால் ரூ.14.00 இலட்சத்தில் தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 2011–2012 ஐடிஎம் திட்டத்தில் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் மலையப்பன் சாலையில் பணி நடைபெற்று வருகிறது. இந்த பிரதான வடிகாலில் மழைநீர் செல்லும் வகையில் வார்டு 19 திருச்சிரோடு கரட்டுமலைக்கு நேர் பின்புறம் ஆஞ்சநேயர் கோவில் எதிரில் மாருதி நகருக்கு செல்லும் ரோட்டுக்கு வடபுறம் மாருதி வசந்த நகரில் மழைநீர் வெளியேறும் வகையில் மழைநீர் வடிகால் கட்ட ரூ.5.00 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. ஐடிஎம் 2012–2013 திட்டத்தில் மேற்கண்ட மழைநீர் வடிகால் அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. நிர்வாக ஒப்புதல் பெற்றவுடன் இப்பணி செய்து முடிக்கப்படும். (ஆணையர், துறையூர் நகராட்சி, கடிதம் ந.க.3917/இ1, நாள்: 25–7–2012)	திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர் நகராட்சி 19–வது வார்டில் மாருதி வசந்த நகரில் கழிவுநீர் வாய்க்கால் கட்டித்தர குழு பரிந்துரை செய்கிறது.

		துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
		(7)	(8)
		மாருதி வசந்த நகரில் அசல் வழக்கு எண்.104/2013 துறையூர் மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் 22.04.2014ல் கோவிலுக்கு ஆதரவாக கால்வாய் கட்டக்கூடாது என்று தீர்ப்பானதால் கால்வாய் கட்டுவதற்கு சாத்தியக்கூறு இல்லை. (ஆணையர் துறையூர் நகராட்சி அவர்களின் கடிதம் ந.க.3917/2012/இ1 நாள்: 06.04.2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
12.	1500	பி. நாகரத்தினம், நாகப்பா நகர் குடியிருப்போர், நாச்சிக்குறிச்சி கிராமம், சோமரசம்பேட்டை, ஸ்ரீரங்கம் வட்டம், திருச்சி மாவட்டம்.	சாக்கடை மற்றும் குப்பைத்தொட்டி அமைக்க கோருதல் தொடர்பாக.

		துறையின் பதிலுரை
		(5)
		நாச்சிக்குறிச்சி ஊராட்சி, நாகப்பா நகர் மற்றும் ராஜா நகரில் 390 மீட்டர் நீளத்திற்கு கழிவு நீர் கால்வாய் வசதி அமைக்கப்பட வேண்டியுள்ளது. இப்பணிக்கு நாச்சிக்குறிச்சி ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.68, நாள்:11-4-2012-ல் நாகப்பா நகர் மற்றும் ராஜாநகரில் வடிகால் அமைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பணி 31-12-2012-க்குள் செய்து முடிக்கப்படும்.

துறையின் பதிலுரை தொடர்ச்சி

(5)

நாச்சிக்குறிச்சி ஊராட்சியின், ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.81 நாள் 7-6-2012-இல் நாகப்பா நகர் மற்றும் ராஜாநகரில் குப்பைத் தொட்டிகள் அமைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்சமயம் குப்பைத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது.
(மணிகண்டம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் கடித எண்.ந.க.அ2/3586/2011, நாள்: 3-9-2012)

குழுவின் பரிந்துரை

(6)

திருச்சிராப்பள்ளி மாவட்டம் நாச்சிக்குறிச்சி ஊராட்சி, நாகப்பா நகர் மற்றும் ராஜா நகரில் கழிவுநீர் கால்வாய் வசதி அமைக்க குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(7)

மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம், நாச்சிக்குறிச்சி ஊராட்சி ராஜா நகரில் ஊராட்சி பொதுநிதியிலிருந்து தீர்மான எண்.68 நாள்: 11.4.12-ன் படி ரூ.85,000/- மதிப்பீட்டில் வடிகால் அமைக்கும் பணி செய்து முடிக்கப்பட்டு, 8.6.2012-ல் பணி முடிவடைந்துள்ளது. நாகப்பா நகரில் ஊராட்சி பொதுநிதியிலிருந்து ரூ.100000/- மதிப்பீட்டில் வடிகால் அமைக்கும் பணி 4.7.12-ல் பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் நாகப்பா நகரில் மீதம் உள்ள 150 மீட்டர் கழிவு நீர் வாய்க்கால் அமைக்கப்பட வேண்டியுள்ளது. இப்பணியானது ஊராட்சி நிதி மூலம் 31.03.2014க்குள் செய்து முடிக்கப்படும்.

(வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) மணிகண்டம் அவர்களின் கடிதம் எண்.ந.க. அ3 / 3586/ 2011 நாள்: 25.02.2014)

குழுவின் குறிப்புரை

(8)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
13.	1505	திருமதி ஆர். சரோஜா, 5/64, 7வது குறுக்குத்தெரு, திருநகர், பொன்மலை, திருச்சி–4.	1. முறையான காவிரி குடிநீர் விநியோகம் கோருதல் 2. பெரிய நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தரக் கோருதல்

துறையின் பதிலுரை

(5)

1. திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம் கீழக்குறிச்சி ஊராட்சிக்குட்பட்ட திருநகரில் தற்போது ஊராட்சிக்குட்பட்ட திருநகரில் தற்போது சீரான காவிரி குடிநீர் முறையாக வழங்கப்பட்டு வருகிறது. மனுதாரரும் கடிதம் வழி முறையான குடிநீர் விநியோகம் பெற்றுள்ளதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

2. திருநகரில் 60000 லிட்டர் கொள்ளளவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கட்டப்பட்ட மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி பழுதடைந்த நிலையில் உள்ளது. புதிய நீர்த்தேக்க தொட்டி கட்டுவதற்கு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது விரைவில் இப்பணி துவங்கப்படும் என திருச்சிராப்பள்ளி கிராம குடிநீர்த் திட்ட கோட்ட நிர்வாக பொறியாளர் தெரிவித்துள்ளார்.

(வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், திருவெறும்பூர் கடித எண். ந.க. தி2 – 3969 – 2011, நாள்:3–8–2012)

குழுவின் பரிந்துரை

(6)

திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம் கீழக்குறிச்சி ஊராட்சிக்குட்பட்ட திருநகரில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம் கிழக்குறிச்சி ஊராட்சிக்குட்பட்ட திருநகரில் தற்போது சீரான காவிரி குடிநீர் முறையாக வழங்கப்பட்டு வருகிறது. மனுதாரரும் கடிதம் வழிமுறையான குடிநீர் விநியோகம் பெற்றுள்ளதற்காக ஒப்புதல் அளித்துள்ளார். ஒப்புதல் கடித நகல் இணைக்கப்பட்டுள்ளது. திருநகரில் 60000 லிட்டர் கொள்ளளவில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. (வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், திருவெறும்பூர் அவர்களின் கடிதம் எண். ந.க. தி2 – 3969–2011 நாள்: 06–04–2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
14.	1516	திருமதி ரமணி, க/பெ.செல்வேந்திரன், கோதை மகளிர் சுய உதவிக்குழு, சிறுநத்தம், சிக்கத்தம்பூர் அஞ்சல், துறையூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	பெருமாள்பாளையம் ஊராட்சி சிறுநத்தம் கிராமத்தில் மகளிர் சுயஉதவிக்குழு கட்டிட வசதி கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

பெருமாள்பாளையம் ஊராட்சியில் தற்பொழுது மொத்தம் 13 சுய உதவிக்குழுக்கள் உள்ளன. அவற்றில் 4 சுய உதவிக்குழுக்கள் பெருமாள்பாளையம் ஊராட்சி சிறுநத்தம் கிராமத்தில் செயல்பட்டு வருகிறது. இவ்வூராட்சியில் 2003–04ஆம் ஆண்டு, 1.25 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக்குழு கட்டிடம் கட்டப்பட்டு பயன்பட்டு வருகிறது. ஒரு ஊராட்சிக்கு ஒரு மகளிர் சுய உதவிக்குழுக் கட்டடம் என்பது அரசின் கொள்கை முடிவாகும்.

(வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், துறையூர் கடித எண். ந.க. அ3 – 3000 – 2011, நாள்:27–8–2012)

குழுவின் பரிந்துரை

(6)

பெருமாள்பாளையம் ஊராட்சி சிறுநத்தம் கிராமத்தில் மகளிர் சுய உதவிக்குழு கட்ட வசதி செய்து தர பஞ்சாயத்துத் தலைவர் அவர்களிடம் நிதி பெற்று பணியினை மேற்கொள்ளுமாறு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(7)

துறையூர் ஊராட்சி ஒன்றியம், பெருமாள்பாளையம் ஊராட்சி சிறுநத்தம் கிராமத்தில் மகளிர் சுகாதார வளாகம் அமைத்திட அரசின் கொள்கையின்படி ஒரு ஊராட்சிக்கு ஒரு மகளிர் சுகாதார வளாகம் என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பெருமாள்பாளையம் ஊராட்சியில் போதிய நிதிவசதி இல்லை.

(வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், துறையூர் அவர்களின் கடிதம் எண்.ந.க.அ3–1307–2013 நாள்: 06.04.2015)

குழுவின் குறிப்புரை

(8)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
15.	1519	திருமதி பார்வதி, க/பெ. கருணாநிதி ரோஸ் சுயஉதவிக்குழு, கங்காணிபட்டி, திருமானூர் அஞ்சல், துறையூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	அங்கன்வாடி மையம் வேண்டுதல்.
		துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
		1-4-2004-லிருந்து வி.அ. சமுத்திரம் 2 என்ற பெயரில் புதிய அங்கன்வாடி மையம் இயங்கி வருகிறது. கட்டடம் கட்ட கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. (மாவட்ட திட்ட அலுவலர் கடிதம் ந.க.அ3/1755/2012, நாள்: 23-7-2012)	மையம் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குழு பரிந்துரை செய்கிறது.
		துறையின் பதிலுரை (7)	குழுவின் குறிப்புரை (8)
		கங்காணிப்பட்டி புதிய அங்கன்வாடி மையக் கட்டிடம் கட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் - மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு கட்டிட பணி நடைபெற்று வருகிறது. (மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், எண்.3, மன்னார்புரம், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் எண்.செ.மு.ந.க.எண்.ஆ8-615-2014 நாள்: 06.04.2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
16.	1520	திரு. வி.எஸ். துரை, துணை ஆட்சியர் (ஓய்வு), 2/13, ரைஸ்மில் தெரு, மருதாண்டகுறிச்சி அஞ்சல், சோமரசம்பேட்டை வழி, திருச்சிராப்பள்ளி மாவட்டம். துறையின் பதிலுரை (5) மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலையானது இக்கோட்டை கட்டுப்பாட்டில் உள்ள மாவட்ட இதர சாலையான பேரூர்–பாண்டமங்கலம் சாலை கி.மீ.4/8–13/4 ஆகும். இச்சாலையின் வளைவுகளை நேர்படுத்தி இருவழிப்பாதையாக மேம்பாடு செய்ய, நில ஆர்ஜிதம் உட்பட தோராயமாக ரூபாய் 688.00 இலட்சம் தேவைப்படும். இத்தொகையினை வரும் நிதியாண்டில் ஏதேனும் திட்டத்தில் எடுத்து செயல்படுத்த முன்னுரிமை வழங்கப்படும். (கோட்டப் பொறியாளர் (நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு கடிதம் ந.க.4834/211/ஆ3, நாள்: 29.11.2011)	திருச்சி உறையூரிலிருந்து குழுமணிக்கு செல்லும் சாலையை அகலப்படுத்தி வளைவுகளை நேர்செய்ய கோருதல் தொடர்பாக. குழுவின் பரிந்துரை (6) திருச்சி உறையூரிலிருந்து குழுமணிக்கு செல்லும் சாலையை அகலப்படுத்த வளைவுகளை நேர்செய்ய வரும் நிதியாண்டில் CRADP திட்டத்தில் இந்தப் பணி மேற்கொள்ள குழு பரிந்துரை செய்கிறது.
		துறையின் பதிலுரை (7) இச்சாலையில் உள்ள வளைவுகளை நேர்படுத்தவும் தற்போதுள்ள போக்குவரத்து செரிவிற்கு ஏற்ப அகலப்படுத்தவும் வரும் நிதியாண்டில் ஏதாவதொரு திட்டத்தின் கீழ் எடுத்து செயல்படுத்த கருத்துரை சமர்பித்து அரசின் நிர்வாக ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்படும். (கோட்டப்பொறியாளர் (நெ) திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித எண்.297–2013–இவ.அ1–1 நாள்: 06.04.2015)	குழுவின் குறிப்புரை (8) துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
17.	1522	திரு. மு. சண்முகம் பொதுச் செயலாளர், எல்லக்குடி நகர் நல சங்கங்களின் பேரமைப்பு, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	தஞ்சாவூர்–திருச்சி தேசிய நெடுஞ்சாலை (NH-67)–இல் திருச்சி பால்பண்ணை ரவுண்டானா முதல் துவாக்குடி வரை இருபுறமும் தொடர்ச்சியாக 14.6 கி.மீ நீளத்திற்கு சர்வீஸ் ரோடு அமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

தஞ்சாவூர்–திருச்சி தேசிய நெடுஞ்சாலையானது கி.மீ. 80–00 முதல் கி.மீ.136/490, முடிய 56.49 கி.மீ நீளத்திற்கு நான்கு வழிச் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கி.மீ.122/00 முதல் 13/490 முடிய உள்ள தூரம் நகர்ப்புறம் மற்றும் வணிக தலம் நிறைந்த இடமாக இருந்ததனால் நில எடுப்பு செய்திட பல்வேறு தரப்பினரிடமிருந்து எதிர்ப்பு வரப்பெற்றமையினால் நில எடுப்பு தவிர்க்கப்பட்டு இருக்கின்ற சாலை அமைத்திட போதுமானதாக இருந்தநிலையில் இச்சாலையை மேம்படுத்திட திட்டமிடப்பட்டது. இப்பகுதியில் உள்ள இடத்தின் அளவிற்கும் அகலத்திற்கும் ஏற்பட 14.49 கி.மீ தூர சாலையில் 4.43 கி.மீ நீளத்திற்கு சர்வீஸ் ரோடு அமைக்கப்பட்டுள்ளது. 14.49 கி.மீ தூரத்திற்கும் தொடர்ச்சியான சர்வீஸ் ரோடு அமைத்திட உத்தேசமாக 33.51 ஹெக்டேர் நிலம் தேவைப்படுகிறது. இதற்கான நில எடுப்பு செய்திட உத்தேச தொகையாக ரூ.45 கோடியும் சாலைப் பணி மேற்கொண்டிட ரூ.54 கோடியும் சர்வீஸ்ரோடு ரூ.99 கோடி தேவையென்பதால் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் தலைவர் 20–8–2010–ல் தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் நில எடுப்பு

குழுவின் பரிந்துரை

(6)

(5)

செலவினத்தை தமிழக அரசு ஏற்றுக் கொண்டால் திட்டம் VII–ன்கீழ் சர்வீஸ் ரோடு அமைத்திட மத்திய அரசுக்கு முன் மொழிவுகள் அனுப்பப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில், தமிழக அரசு அரசாணை எண் 104 நாள்: 29–8–2011–ல் ரூ.84.50 கோடி ஒதுக்கீடு செய்து ஆணைகள் வழங்கியுள்ளது. திருச்சி மாவட்டத்தில் மேற்சொன்ன பகுதியில் சர்வீஸ் ரோடு அமைத்திட 9 கிராமங்களில் நில எடுப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. தனி மாவட்ட வருவாய் அலுவலர் (தேசிய நெடுஞ்சாலை), திருச்சிராப்பள்ளி நில எடுப்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். நில எடுப்புக்கு உட்படும் 9 திட்ட அட்டவணை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் அளிக்கப்பட்டு அதற்கான பணிகள் தனி மாவட்ட வருவாய் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் கி.மீ.122/000 முதல் கி.மீ.136/490 முடிய உள்ள 14.490 கி.மீ தூரத்திற்கு தேவையான உட்கட்ட அமைப்புகளுடன் தொடர்ச்சியான சர்வீஸ் ரோடு அமைத்திட ரூ.152.105 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு தஞ்சாவூர் திட்ட இயக்குநரால் 6–2–2012–ல் சென்னை, தலைமைப் பொதுமேலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான மத்திய அரசின் ஒப்புதல் பெற்ற பின்னர் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

(கோட்டப் பொறியாளர், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அவர்களின் கடிதம் எண். 11017/03/2009, நாள்: 20–7–2012)

(6)

தஞ்சாவூர் – திருச்சி தேசிய நெடுஞ்சாலை ((NH-67)–ல் திருச்சி பால்பண்ணை ரவுண்டானா முதல் துவாக்குடி வரை இருபுறமும் தொடர்ச்சியாக 14.6 கி.மீ நீளத்திற்கு சர்வீஸ் ரோடு மத்திய அரசின் அனுமதி பெற்று அமைக்க குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
திருச்சி பால்பண்ணை ரவுண்டான முதல் துவாக்கு வரை இருபுறமும் தொடர்ச்சியாக 14.6 கி.மீ சர்வீஸ் சாலை அமைக்க மத்திய அரசால் 3D விளம்பரம் செய்யப்பட்டது. சர்வீஸ் சாலை அமைக்க 45 மீட்டரிலிருந்து 60 மீட்டராக மாற்ற அரசின் மேலான அறிவுரை பெற்றும் 24.05.2013ல் வெளியான 3 டி விளம்பரத்தை நிறுத்தி வைக்க சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 102 நில உடமைதாரர்கள் சேர்ந்து 6 ரிட் மனுக்களை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்குகள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் விசாரணையில் உள்ளது. மேற்படி வழக்கின் முடிவை எதிர்பார்த்தும் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது. (தனி மாவட்ட வருவாய் அலுவலர், நிலமெடுப்பு தேசிய நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித எண்.ந.க.இ.24–2007 நாள்: 06.04.2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
18.	1524	திரு. வெ. சந்தானம், த/பெ. வெள்ளச்சாமி, நெ.1D/8, செல்வவிநாயகர் கோவில் தெரு, திருச்சி–8.	திருச்சிராப்பள்ளி நகரம் செல்வவிநாயகர் கோவில் தெரு, திட்டப்பகுதியில் கிரயப்பத்திரம் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

திருச்சிராப்பள்ளி நகரம் செல்வ விநாயகர் கோவில் தெரு உலகவங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட நகர்ப்புற வளர்ச்சித்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டப்பகுதியாகும். மேற்கண்ட திட்டப்பகுதியில் உள்ள மொத்த புல எண்களில் புல எண் 43 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடம் கோயில் நிலம் என வகைபாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட இடத்தை வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கு இந்து அறநிலையத்துறையிடம் தொடர் நடவடிக்கை செய்யப்பட்டு வருகிறது. மேலும் மேற்கண்ட புல எண்ணிற்கும் மற்ற புல எண்ணிற்கும் வாரியத்திற்கு நல உரிமை மாற்றம் செய்வதற்கு அரசாணை பெறப்படவுள்ளது. பெறப்பட்டவுடன் இத்திட்டப்பகுதியில் உள்ள மனைகளுக்கு கிரயப்பத்திரம் வழங்கப்படும்.

(செயற்பொறியாளர், த.நா.குடிசை மாற்று வாரியம், கடித எண்.1310/அ4/2012, நாள்: 25–7–2012)

குழுவின் பரிந்துரை

(6)

திருச்சிராப்பள்ளி நகரம் செல்வவிநாயகம் கோவில் தெரு திட்டப்பகுதியில் கிரயப்பத்திரம் வழங்க உரிய அரசாணை பெற்று செயல்படுத்துமாறு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(7)

அரசிடமிருந்து வாரியத்திற்கு நிலமாற்றம் செய்து, அரசு ஆணை கிடைக்கப் பெற்றவுடன் பயனாளிகளுக்கு கிரையப்பத்திரம் உடனடியாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(நிர்வாகப் பொறியாளர், திருச்சிராப்பள்ளி கோட்டம் அவர்களின் கடித எண்.ந.க.எண். 2013 / 92 / அ3 / A4 நாள்: 19.2.2014)

குழுவின் குறிப்புரை

(8)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
19.	1528	திரு. ஆ. சுப்பையா, கொல்லப்பட்டி, நெய்வேலி அஞ்சல், முசிறி வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	கொல்லப்பட்டி கிராமத்தில் நவீன பொது கழிப்பறை குளியல் அறையுடன் கூடிய கட்டிடம் கட்டித் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

கொல்லப்பட்டி கிராமம் நெய்வேலி ஊராட்சியைச் சேர்ந்த ஒரு குக்கிராமம் ஆகும். நெய்வேலி கிராமத்தில் 2003–2004–ஆம் ஆண்டு ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் கட்டப்பட்டு மீண்டும் 2011–2012–ஆம் ஆண்டு ரூ.31,500/–மதிப்பீட்டில் புனரமைப்பு செய்யப்பட்டு மகளிர் சுய உதவிக்குழுவினரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அரசின் கொள்கை முடிவின்படி ஊராட்சிக்கு ஒரு மகளிர் சுகாதார வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் இந்த சுகாதார வளாகம் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

(வட்டார வளர்ச்சி அலுவலர் (வ) ஊராட்சி ஒன்றியம் கடித எண். ந.க.அ5/969/2011, நாள்:31–08–2012)

குழுவின் பரிந்துரை

(6)

ஒவ்வொரு வீட்டிற்கும் தனித்தனியாக கழிவறை கட்டிக்கொள்ள அரசாங்கம் கொடுக்கும் தொகையை கொண்டு மீதமுள்ள வீடுகளுக்கு கழிவறை கட்டித்தர நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(7)

அரசின் கொள்கை முடிவின்படி ஒரு ஊராட்சிக்கு ஒரு மகளிர் சுகாதார வளாகம் என்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வளாகம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேலும், நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் நிதியாண்டில் தனிநபர் கழிவறை அனைத்து வீடுகளுக்கும் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

(வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.ஊ) ஊராட்சி ஒன்றியம், முசிறி அவர்களின் கடித எண்.ந.க.அ6/1237/2011, நாள்: 06.04.2015)

குழுவின் குறிப்புரை

(8)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
20.	1530	திரு எஸ். ராமராஜ், எம்.ஏ., பைத்தம்பாறை அஞ்சல், முசிறி வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	ரெட்டியாப்பட்டி ஏரியிலிருந்து கரிகாலி ஏரி வரை சுமார் 1.5 கி.மீ. நீளத்திற்கு துணை வாய்க்கால் அமைத்து கொடுக்கவும், மழை காலங்களில் காவிரி வழியோர கிராமங்கள் வெள்ள பாதிப்பு வராமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

ரெட்டியாப்பட்டி ஏரியிலிருந்து கரிகாலி ஏரிக்கு 1984–ஆம் வருடம் ஒரு புதிய கால்வாய் சுமார் 6.00 கி.மீ தூரத்திற்கு வெட்டப்பட்டு நீருட்டப்படுகின்றது. கடந்த 25–01–2011 அன்று திட்டதளத்தை நேரில் சென்று ஆய்வு செய்ததில் மேற்கண்ட கால்வாய் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்பது தெரியவருகின்றது. 2010 அக்டோபரில் நீர் சென்று ஏரி நிரம்பி இருக்கிறது. ரெட்டியாப்பட்டி ஏரியிலிருந்து துணை கால்வாய் வெட்டுவதால் அதிகப்படியான பட்டா நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருப்பதாலும் 1 கி.மீ தூரத்திற்கு ஆழமாக வெட்ட வேண்டியிருப்பதாலும், துணைக்கால்வாய் அமைப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை. மேலும், மழைக்காலங்களில் காவேரி வழியோர கிராமங்கள் வெள்ள பாதிப்பு வராமல் இருக்க தற்பொழுது காவேரி (கட்டளை) குண்டாறு இணைப்பு கால்வாய் திட்டம் இந்த ஆண்டிலேயே நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. மேலும், காவேரி கரைகளும் பலப்படுத்தப்பட்டு உள்ளது.

(செயற்பொறியாளர், பொது, நீ.ஆ.து. திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்டம், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.4M/D2/கோ.58/2012 நாள்: 21–02–2012)

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் கோரிக்கை குறித்த மூலக் கோப்புகளை உரிய அலுவலர்களால் இணைந்த ஆய்வு (Joint Inspection) மேற்கொண்டு அறிக்கை அளிக்குமாறும் இப்பணியை பொதுப்பணித்துறை மேற்கொள்ளுமாறும் குழு பரிந்துரை செய்கிறது.

(7)

குழுவின் பரிந்துரைப்படி திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்ட, செயற்பொறியாளர் மற்றும் அரியாறு வடிநில கோட்டச் செயற்பொறியாளர் ஆகியோரால் 04.03.2014 அன்று தளம் கூட்டு ஆய்வு செய்யப்பட்டது.

ரெட்டியாப்பட்டி ஏரியிலிருந்து கரிகாலி ஏரிக்கு 1984–ஆம் வருடம் ஒரு புதிய கால்வாய் சுமார் 6.00 கி.மீ தூரத்திற்கு வெட்டப்பட்டு நீருட்டப்படுகின்றது. கடந்த 04.03.2014 அன்று திட்ட தளத்தை நேரில் சென்று ஆய்வு செய்ததில் மேற்கண்ட கால்வாய் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்பது தெரிய வருகின்றது. 2010 அக்டோபரில் நீர் சென்று ஏரி நிரம்பி இருக்கிறது. மேலும் சமீபத்தில் 2014 நவம்பர் மற்றும் 2015 ஜனவரி மாதங்களில் வாய்க்காலில் தண்ணீர் சென்று ஏரி நிரம்பி இருக்கிறது. ரெட்டியாப்பட்டி ஏரியிலிருந்து துணை கால்வாய் வெட்டுவதால் அதிகப் படியான பட்டா நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருப்பதாலும் 1 கி.மீ தூரத்திற்கு ஆழமாக வெட்ட வேண்டியிருப்பதாலும் துணைக் கல்வாய் அமைப்பதற்கு சாத்தியக் கூறு இல்லை. மேலும், மழைக் காலங்களில் காவேரி வழியோர கிராமங்கள் வெள்ள பாதிப்பு வராமல் இருக்க தற்பொழுது காவேரி (கட்டளை)– குண்டாறு இணைப்பு கால்வாய் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், காவேரி கரைகளும் பலப்படுத்தப்பட்டு உள்ளது. தற்போது ரெட்டியாப்பட்டி கரிகாலி வாய்க்காலில் புனரமைப்பு பணிகள் செய்யும் பட்சத்தில் தேவையான நீரை பாசனத்திற்கு கொண்டு செல்ல முடியும் என்பதனை ஆய்வின் போது அறியப்பட்டது.

	துறையின் பதிலுரை தொடர்ச்சி	குழுவின் குறிப்புரை
	(7)	(8)
	ஆகவே புனரமைப்பு பணி மேற்கொள்ள ரூ.90.00 இலட்சத்திற்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தேசிய வேளாண்மை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (NADP 2013-14) மேற்கொள்ள அரசிடம் நிதி ஒதுக்கீடு கோரும் பொருட்டு தலைமைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, நீர்வள ஆதாரங்கள் அமைப்பு திருச்சி மண்டலம், திருச்சி அவர்களது அலுவலக கடித எண்.154M/AE-III/F.213/NADP/2013/நாள்: 26.03.2013ன் வாயிலாக தலைமைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, நீர்வள ஆதாரத் துறை திட்ட உருவாக்கம், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் NADP திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறாததால் தற்பொழுது NABARD திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு பெற ரூ.125.00 இலட்சத்திற்கு அரியாறு வடிநிலக் கோட்டம், திருச்சி அலுவலகத்தால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு அரசுக்கு அனுப்பப்பட்டு அரசாணை பெற்று நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. (செயற்பொறியாளர், பொது, நீஆது, திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்டம், திருச்சி–1 அவர்களின் கடித எண்.38^{M}/கோ.58/வ2/ரெட்டியாப்பட்டி/நாள்:07.04.2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
21.	1532	திரு. கா. தமிழரசு, எம்.ஏ., முன்னாள் மாவட்டச் செயலாளர், அண்ணா தொழிற்சங்கம், பாண்டியபுரம், துறையூர் அஞ்சல், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	பங்குனி வாய்க்கால் தூர் வாரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

பங்குனி வாய்க்கால் என்பது ஒரு வடிகால் வாய்க்காலாகும். இதன் மொத்த நீளம் 12 மைல் ஆகும். இதில் 1/6+100 முதல் 2/6+1 வரை 2010–2011–ஆம் ஆண்டில் தூர் வாரப்பட்டுள்ளது. இவ்வாண்டு தூர் மற்றும் திட்டுகள் நிறைந்த பகுதியான 7/3+100 முதல் 12/0 வரை தூர்வாரப்பட்டுள்ளது. இடைப்பட்ட மேல் பகுதிகள் இவ்வாண்டு திருத்திய நிதியாதாரம் அல்லது வரும் ஆண்டு பெறப்படும் பராமரிப்பு நிதியில் முன்னுரிமை அடிப்படையில் தூர்வார நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(பொதுப்பணித்துறை, நீர்வள ஆதாரங்கள் துறை ஆற்றுப் பாதுகாப்பு உபகோட்டம், இலால்குடி கடிதம் எண் ந.க. கோ26/ உ.செ.பொ.(இலால்குடி) 2012 நாள்:03–08–2012)

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் கோரிக்கை மீது தற்காலிக ஏற்பாடாக பெருமளவில் திட்டுக்களாக உள்ள பகுதியை தூர்வாருவதற்கு ஏற்பாடு செய்து அதனை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தெரியப்படுத்துமாறும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(7)

பங்குனி வாய்க்காலில் மண்திட்டு நிறைந்த பகுதியான 4/4+150–7/3+100 உள்ள மண் திட்டுக்களை 2013–14ம் ஆண்டு தூர்வாரப்பட்டு தண்ணீர் தடையின்றி செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மீதமுள்ள 0/0 – 1/6+100மீ. மற்றும் 2/6+100மீ முதல் 4/4+150மீ. வரை உள்ள பகுதிகள் எதிர்வரும் நிதியாண்டில் பெறப்படும் நிதியினை பொறுத்து தூர்வாரப்படும்.

(செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை நீர்வள ஆதாரங்கள் துறை ஆற்று பாதுகாப்பு கோட்டம், திருச்சி அவர்களின் கடித எண்.271M /கோ206/வ3/2014/ நாள்: 6.4.2015)

குழுவின் குறிப்புரை

(8)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
22.	1533	திரு. கா. தமிழரசு, எம்.ஏ., முன்னாள் மாவட்டச் செயலாளர், அண்ணா தொழிற்சங்கம், பாண்டியபுரம், துறையூர் அஞ்சல், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	பெருவளை வாய்க்கால் குறுக்கே புதிய பாலம் கட்டித்தர கோரியது.

துறையின் பதிலுரை

(5)

ஒருங்கிணைந்த ஒதுக்கப்பட்ட வருவாய் திட்டத்தின்கீழ் 2011–2012 ஆம் ஆண்டு இப்பணி தேர்வு செய்யப்பட்டு டெண்டர் கோரப்பட்டது. டெண்டர் ஒப்பந்ததாரரால் எடுக்கப்படாத நிலையில் புதிய விலைப்பட்டியல் படி திருத்திய மதிப்பீடு செய்யப்பட்டு 2012–2013 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஒதுக்கப்பட்ட வருவாய் திட்டத்தின்கீழ் (PAR) இப்பணியை ரூ.111.90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் இப்பணி செய்து தரப்படும்.


(வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், மண்ணச்சநல்லூர் கடிதம் எண் ந.க. அ2–3105/11 நாள்: 31–07–2012)

குழுவின் பரிந்துரை

(6)

பெருவளை வாய்க்கால் குறுக்கே புதிய பாலம் கட்டித்தர உரிய அனுமதி மற்றும் நிதியை பெற்று பணியினை மேற்கொள்ள குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
பெருவளை வாய்க்கால் குறுக்கே பாலம் கட்டுவது சம்மந்தமாக ஆணையரின் கடித எண்.அ3–4714–2013 நாள்: 28.11.2013 அன்று கடிதத்துடன் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு புதிய பாலம் கட்டுவதற்கு ரூ.80.00 லட்சம் தேவைப்படும் என்பதற்கான அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் இப்பணியினை மேற்கொள்ள இயலும். (வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) ஊராட்சி ஒன்றியம், மண்ணச்சநல்லூர் அவர்களின் கடித எண்.ந.க.அ3/5041/2013 நாள்: 28–02–2014)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.



இணைப்பு – III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
1.	1463	திரு. எம். மதலைமுத்து, செயலர், கிராம முன்னேற்ற சங்கம், கல்பாளையம், கொணலை அஞ்சல், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சிராப்பள்ளி–621 132.	மண்ணச்சநல்லூர் ஒன்றியம் கொணலை ஊராட்சி கல்பாளையம் குடியிருப்பிற்கு கொள்ளிடம் ஊரக கூட்டுக்குடிநீர் திட்டம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
முசிறி மற்றும் மண்ணச்சநல்லூர் ஒன்றியங்களை சார்ந்த கூடப்பள்ளி மற்றும் 129 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான வேலை உத்தரவு தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தஞ்சாவூர் அவர்களால் 9.11.2012 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், திட்டம் முடிவுறும் பொழுது மனுதாரர் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிக்கு குடிநீர் விநியோகம் வழங்கப்படும். (நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகரக் கோட்டம், திருச்சி கடித எண். நக.100/சம.குழு/இவ.அ2, நாள்:02.08.2012/03.09.2012)	மண்ணச்சநல்லூர் ஒன்றியம் கொணலை ஊராட்சி கல்பாளையம் குடியிருப்பிற்கு கொள்ளிடம் ஊரக கூட்டுக்குடிநீர் திட்டம் வாயிலாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க இரண்டு மாதங்களுக்குள் ஒப்பந்தப் புள்ளி கோரும் பணி முடிவுற்று, குடிநீர் வழங்கும் பணியினை விரைந்து நிறைவேற்றிட குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
	(7)	(8)
	திருச்சி மாவட்டத்தில் உள்ள முசிறி மற்றும் மண்ணச்சநல்லூர் ஒன்றியங்களைச்சார்ந்த கூடப்பள்ளி மற்றும் 129 கிராம குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கான பணிகள் அனைத்தும் நிறைவு பெற்று மண்ணச்சநல்லூர் ஒன்றியம், கொணலை ஊராட்சி, கல்பாளையம் குடியிருப்புக்கு 28.10.2014 முதல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டம் 27.12.2014 முதல் ஒப்பந்தக்காரர் பராமரிப்பில் உள்ளது. (நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர கோட்டம், திருச்சி அவர்களின் கடித. எண்.கோ.மனுக்கள் குழு/ இவ அ2/ நாள்.6.4.2015)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2.	1465	திரு. எம். அங்கமுத்து, தச்சன்குறிச்சி அஞ்சல், இலால்குடி வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	தச்சன்குறிச்சி கிராமத்தில் வடக்கு பகுதியில் அமைந்துள்ள மதிகெட்டான் வாய்க்காலில் தடுப்புச் சுவர் பழுது நீக்கம் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

இலால்குடி ஊராட்சி ஒன்றியம், தச்சன்குறிச்சி ஊராட்சியில் அமைந்துள்ள மதிகெட்டான் வாய்க்காலில் தடுப்புச் சுவர் 19 மீட்டர் நீளத்திற்கும் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 25 மீட்டர் தடுப்புச் சுவரினை மேலும் 2 மீட்டர் உயரத்திற்கு உயர்த்தும் பணிக்கு உத்தரவு வழங்கப்பட்டு தற்போது பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது.

(வட்டார வளர்ச்சி அலுவலர் (வ), ஊராட்சி ஒன்றியம், இலால்குடி கடித எண்.ந.க.அ6/2570/2011, நாள்: 31.8.2012)

குழுவின் பரிந்துரை

(6)

திருச்சிராப்பள்ளி மாவட்டம் தச்சன்குறிச்சி கிராமத்தில் வடக்கு பகுதியில் அமைந்துள்ள மதிகெட்டான் வாய்க்காலில் தடுப்புச் சுவர் பழுது நீக்கத்தை விரைவாக முடித்து தர குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(7)

தச்சங்குறிச்சி கிராமத்தில் வடக்கு பகுதியில் அமைந்துள்ள மதிகெட்டான் வாய்க்காலில் மொத்தம் உள்ள 44 மீட்டர் நீளம் கொண்ட தடுப்பு சுவரில் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள 25 மீட்டர் நீளம் தடுப்பு சுவர் போக மீதமுள்ள 19 மீட்டர் நீளமுள்ள தடுப்பு சுவர் பணியானது இலால்குடி ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் தீர்மான எண்.93 நாள்: 29.08.2012ன் படி ரூ.1.15 இலட்சத்தில் பணி எடுத்து செய்யப்பட்டு பணி முழுமையாக முடிவடைந்து கடந்த 13.02.2013 முதல் இது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

(வட்டார வளர்ச்சி அலுவலர் (வ), ஊராட்சி ஒன்றியம், இலால்குடி அவர்களின் கடித எண்.ந.க.அ3/270/2014 நாள்: 18.02.2015)

குழுவின் குறிப்புரை

(8)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
3.	1470	பொதுமக்கள் சார்பில் கண்ணையன், தினா மற்றும் போஸ், விவேகானந்த நகர் குடியிருப்போர் நலச்சங்கம், மேலகல்கண்டார் கோட்டை, திருச்சிராப்பள்ளி–620 011.	தார்ச் சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி வேண்டுதல்.

துறையின் பதிலுரை

(5)

வார்டு எண்.30–க்கு உட்பட்ட விவேகானந்தர் நகர் பகுதியில் 2013–2014–ஆம் நிதியாண்டில் தார்ச்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், மழைநீர் வடிகால் அமைக்க TNUFISL நிறுவனத்தின் மூலமாக ஒரு கலந்தாலோசகர் நியமித்து பணிகள் மேற்கொள்ள ஆய்வுப்பணிகள் துவங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகள் வரும் நிதியாண்டு 2013–2014–ல் மேற்கொள்ள இயலும்.
(ஆணையர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கடிதம் எண். ந.க.10690/2011/இ1(பொன்) நாள்: 01.12.2011)

குழுவின் பரிந்துரை

(6)

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட விவேகானந்தர் நகரில் தார்ச்சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி விரைந்து அமைத்துத் தர குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(7)

விவேகானந்தர் நகர் பகுதியில் உள்ள மெயின் சாலை TURIF திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் மற்றும் தார்சாலை வசதி 32.40 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் பொதுநிதியின் கீழ் 5.00 இலட்சம் மதிப்பீட்டிலும் மழைநீர் வடிகால் கட்டும் பணி 26.02.2014ல் செய்து முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.
(ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களின் கடித எண்.10690/2011/இ1 (பொன்) நாள்: 06.04.2015)

குழுவின் குறிப்புரை

(8)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
4.	1477	திருமதி தனலெட்சுமி, க/பெ. நடராஜன், தலைவி, அமுதசுரபி சுய உதவிக்குழு, மீனாட்சிபட்டி, பொன்னுசங்கம்பட்டி அஞ்சல், துறையூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	அங்கன்வாடி மையம் வேண்டுதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
மீனாட்சிப்பட்டி, புதிய அங்கன்வாடி மையம் துவங்க, சென்னை, முதன்மை செயலாளர் (ம) சிறப்பு ஆணையருக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. கடித எண்.அ3–539–2010, நாள்: 13.1.2011. (மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், மன்னார்புரம் அவர்களின் கடித ந.க.அ3/1755/2012, நாள்: 23.7.2012)	திருச்சிராப்பள்ளி மாவட்டம் மீனாட்சிப்பட்டியில் புதிய அங்கன்வாடி மையம் அமைத்துக் கொடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை (7)	குழுவின் குறிப்புரை (8)
மீனாட்சிப்பட்டியில் குறு அங்கன்வாடி மையம் 02.05.2014 அன்று துவங்கப்பட்டு மையம் செயல்பட்டு வருகிறது. (மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், எண்.3, மன்னார்புரம், திருச்சிராப்பள்ளி–20 அவர்களின் கடித எண். செ. மு. ந.க. எண். 4723–என் சி 3–1–2014 நாள்: 06.04.2015)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
5.	1479	திருமதி கலைச்செல்வி, க/பெ. பழனிமுத்து, சிறுநத்தம், கோதாவரி சுய உதவிக்குழு, சிக்கதம்பூர் அஞ்சல், துறையூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	அங்கன்வாடி மையம் வேண்டுதல் குறித்து.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
சிறுநத்தம் புதிய அங்கன்வாடி மையம் துவங்க, சென்னை, முதன்மை செயலாளர் (ம) சிறப்பு ஆணையருக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. கடித எண். அ3– 539–2010, நாள்: 13.1.2011. (மாவட்ட திட்ட அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.அ3.1755/2012 நாள்: 23.7.2012)	திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுநத்தம் பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் துவக்க குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை (7)	குழுவின் குறிப்புரை (8)
சிறுநத்தத்தில் முதன்மை அங்கன்வாடி மையம் 02.05.2014 அன்று துவங்கப்பட்டு மையம் செயல்பட்டு வருகிறது. (மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், எண்.3, மன்னார்புரம், திருச்சிராப்பள்ளி–20 அவர்களின் கடித எண். செ.மு. ந.க. எண். 4723–என் சி 3–1–2014 நாள்:06.04.2015)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
6.	1480	திருமதி கிருபா, க/பெ. ரவி, வண்ணமலர் மகளிர் சுய உதவிக்குழு, கிருஷ்ணாபுரம், கோவிந்தாபுரம் அஞ்சல், துறையூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	கிருஷ்ணாபுரம் கிராமத்தில் சுகாதார வளாகம் வசதி கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
கோவிந்தாபுரம் ஊராட்சியில் மொத்தம் 929 வீடுகள் உள்ளன. இவ்வூராட்சியில் மகளிர் சுகாதார வளாகம் 2005–ஆம் ஆண்டு கட்டப்பட்டன. மேலும் 2011–2012–ஆம் ஆண்டு சுகாதார வளாகம் மின்வசதி, தண்ணீர் வசதி, நடைபாதை ஆகியவைகள் ரூ.45,000/– மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு நல்ல நிலையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் ஊராட்சிக்கு ஒரு மகளிர் சுகாதார வளாகம் அமைக்க அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. அதன்படி அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. (வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், துறையூர் கடிதம் எண். ந.க.அ3–3000–2011, நாள்: 27–8–2012)	திருச்சிராப்பள்ளி மாவட்டம் கோவிந்தாபுரம் ஊராட்சியில் கிருஷ்ணாபுரம் கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தன் விருப்ப நிதியில் மகளிர் சுகாதார வளாகம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ள குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை (7)	குழுவின் குறிப்புரை (8)
துறையூர் ஊராட்சி ஒன்றியம் கோவிந்தாபுரம் ஊராட்சி கிருஷ்ணாபுரம் கிராமத்தில் சுகாதார வளாக வசதிகள் ஊராட்சிக்கு ஒன்று என்ற அடிப்படையில் கோவிந்தாபுரம் ஊராட்சியில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. (வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.ஊ) துறையூர் அவர்களின் கடித எண்.ந.க.அ3–1307–2013 நாள்: 06.04.2015)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
7.	1503	திருமதி பா. வெள்ளையம்மாள், க/பெ. பாண்டித்துரை, தென்றல் உதயம் மகளிர் சுய உதவிக்குழு, வெங்கடாசலபுரம் அஞ்சல், துறையூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	சாக்கடை கால்வாய் வசதி செய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

வெங்கடாசலபுரம் ஊராட்சியின் நாராயணன் வீடு முதல் நாகராஜன் வீடு வரை உள்ள கான்கிரீட் சாலையின் இருபுறமும் கழிவுநீர் வடிகால் வாய்க்கால் அமைக்க ஊராட்சி தீர்மான எண் 235/2012–2013, நாள்: 14–6–2012–ன்படி மதிப்பீடு பெறப்பட்டு தரை கான்கிரீட் போடப்பட்டுள்ளது.

(வட்டார வளர்ச்சி அலுவலர் ஊராட்சி ஒன்றியம், உப்பிலியபுரம், கடித எண்.ந.க.அ/4.262/2012,நாள்:3.8.2012)

குழுவின் பரிந்துரை

(6)

வெங்கடாசலபுரம் ஊராட்சியில் நாராயணன் வீடு முதல் நாகராஜன் வீடு வரையுள்ள கான்கிரீட் சாலையின் இருபுறமும் கழிவுநீர் வடிகால் அமைக்க குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(7)

வெங்கடாசலபுரம் ஊராட்சியில் நாராயணன் வீடு முதல் நாகராஜன் வீடு வரை உள்ள கான்கீரிட் சாலையின் இருபுறமும் கழிவுநீர் வடிகால் 98மீ நீளத்திற்கு ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி தீர்மான எண்.827–2012–14 நாள்:18.06.2013–ன்படி மதிப்பீடு பெறப்பட்டு பணி முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது.

(வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) ஊராட்சி ஒன்றியம், உப்பிலியபுரம் அவர்களின் கடித எண்.ந.க.அ4/262/2012 நாள்: 06.04.2015)

குழுவின் குறிப்புரை

(8)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
8.	1508	திருமதி சரஸ்வதி க/பெ. கோவிந்தராஜ், சுய உதவிக்குழு எண் 1 தலைவி, சேர்வைகாரன்பட்டி, சிக்கத்தம்பூர் அஞ்சல், துறையூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	சேர்வைகாரன்பட்டி கிராமத்தில் நியாயவிலைக்கடை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
புதிய பகுதிநேர அங்காடிக்கு 150 குடும்ப அட்டைகளுக்கு குறையாமலும், தாய் அங்காடியிலிருந்து 11/2, கி.மீ தூரம் இடைவெளி இருக்கவேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாததால், தற்சமயம் நியாயவிலைக்கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. துணைப்பதிவாளர், பொது விநியோகத்திட்டம், திருச்சிராப்பள்ளி (கடிதம் ந.க. 2959 / 2011 / பொவிதி, நாள்:17–2–2012)	சேர்வைகாரன்பட்டி கிராமத்தில் நியாயவிலைக்கடை அமைப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் அனுமதி பெற்று பச்சைமலையில் உள்ள நடமாடும் நியாயவிலைக் கடையுடன் இணைத்து செய்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை (7)	குழுவின் குறிப்புரை (8)
சேர்வைக்காரன்பட்டி கிராமத்தில் நகரும் நியாய விலைக்கடை அமைத்திட அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து 08.10.2014 முதல் இப்பகுதியில் புதிய நியாவிலைக்கடை செயல்பட்டு வருகிறது. (துணைப்பதிவாளர், பொது விநியோகத்திட்டம், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.2959/2011/ பொவிதி 1, நாள்: 06.04.2015)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
9.	1517	ரேணுகா, க/பெ. மாணிக்கம், தலைவி, இளங்குயில் சுய உதவிக் குழு, புதூர், சேனப்பநல்லூர் அஞ்சல், துறையூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	அங்கன்வாடி மையம் வேண்டுதல் குறித்து.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
எஸ். புதூர் புதிய அங்கன்வாடி மையம் துவங்க, சென்னை, முதன்மை செயலாளர் (மு) சிறப்பு ஆணையருக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளது. கடித எண் அ3–539–2010, நாள்: 13–1–2011. (மாவட்ட திட்ட அலுவலர் கடிதம் ந.க.அ3/1755/2012, நாள்: 23–7–2012)	எஸ். புதூரில் புதிய அங்கன்வாடி மையம் துவங்க, நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை (7)	குழுவின் குறிப்புரை (8)
எஸ்.புதூரில் முதன்மை அங்கன்வாடி மையம் 02.05.14 அன்று துவங்கப்பட்டு மையம் செயல்பட்டு வருகிறது. (மாவட்ட திட்ட அலுவலர், மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், எண்.3, மன்னார்புரம், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் எண். செ. மு. ந.க. எண்.4723–என்சி 3–1–2014 நாள்: 06.04.2015)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10.	1518	திருமதி கமலம், க/பெ. ரெங்கராஜ், தலைவி, கரட்டூர் சுய உதவிக் குழு எண்.1, சங்கம்பட்டி அஞ்சல், துறையூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	அங்கன்வாடி மையம் வேண்டுதல்.
		துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
		(5)	(6)
		கரட்டூர் புதிய அங்கன்வாடி மையம் துவங்க, சென்னை, முதன்மை செயலாளர் (ம) சிறப்பு ஆணையருக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளது. கடித எண்.அ3-539 -2010, நாள்: 13-1-2011. (மாவட்ட திட்ட அலுவலர் கடிதம் ந.க.அ3/1755/2012 நாள்: 23-7-2012)	கரட்டூரில் புதிய அங்கன்வாடி மையம் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குழு பரிந்துரை செய்கிறது.
		துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
		(7)	(8)
		கரட்டூரில் முதன்மை அங்கன்வாடி மையம் 2.5.2014 அன்று துவங்கப்பட்டு மையம் செயல்பட்டு வருகிறது. (மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், எண்.3, மன்னார்புரம், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் எண்.செ.மு.ந.க.எண்.4723-என்சி 3-1-2014 நாள்: 06.04.2015)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
11.	1526	திரு. ஆர். லோகநாதன், த/பெ. ராமன், மேலூர் கடைவீதி, சா. அய்யம்பாளையம், மண்ணச்சநல்லூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	அய்யம்பாளையம் துணை சுகாதார நிலையத்திற்கு அரசு மருத்துவர் நியமனம் செய்யக் கோருவது தொடர்பாக.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
30000 மக்கட்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்ற அரசின் விதியின்படி ஆரம்ப சுகாதார நிலையம் தோற்றுவிக்கப்பட்டு மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர். மேலும், 5000 மக்கள்தொகை கொண்ட துணை சுகாதார நிலையங்களுக்கு ஒரு கிராம சுகாதார செவிலியர் என்ற விகிதத்தில் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். மேலும் அய்யம்பாளையம் துணை சுகாதார நிலையத்திற்கும் ஒரு கிராம சுகாதார செவிலியர் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார். குணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் மற்றும் குடும்பநலம், திருச்சிராப்பள்ளி கடிதம் நக. 6222/அ1/2011 நாள்: 29–11–2011)	அய்யம்பாளையம் துணை சுகாதார நிலையத்திற்கு மாதம் ஒரு முறை நடமாடும் மருத்துவக் குழுவை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை (7)	குழுவின் குறிப்புரை (8)
அய்யம்பாளையம் துணை சுகாதார நிலைய பகுதிக்கு மாதம் ஒருமுறை நடமாடும் மருத்துவக் குழு சென்று சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (குணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மற்றும் குடும்பநலம், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித எண். ந.க.6222–அ1 –2011 நாள்.19.02.2014)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
12.	1534	திரு. ஆர். பிச்சைராஜ், கண்காணிப்பாளர் ஆவின் (ஓய்வு), 43, மேலகள்ளர் தெரு, 42வது வார்டு, காஜாமலை, திருச்சிராப்பள்ளி.	குடிநீர் வசதி வேண்டுதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
வார்டு எண் 42, மேலக்கள்ளர் தெருவிற்கு தற்சமயம் இந்தியன் வங்கி காலனியில் போர்வெல் அமைத்து அதன் மூலம் தண்ணீர் (குடிநீர் அல்லாத உபயோகம்) வழங்கப்பட்டு வருகிறது. மேலும், புதிய குடிநீர் திட்டப்பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணி முடிவுற்ற பின் குடிநீர் குறித்த குறைபாடும் முடிவு பெறும். (ஆணையர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கடிதம் எண் ந.க.இ1–10695/11, நாள்: 01–12–2011)	திருச்சிராப்பள்ளி நகராட்சி வார்டு எண் 42–ல் தினசரி குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை (7)	குழுவின் குறிப்புரை (8)
வார்டு எண்.42க்குட்பட்ட மேல கள்ளத் தெரு மற்றும் அனைத்து தெருக்களுக்கும் கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் தினந்தோறும் குடிநீர் போதுமான அளவு வழங்கப்பட்டு வருகிறது. (ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களின் கடித எண்.இ1/10695/11 நாள்: 06.04.2015)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

அ.மு.பி. ஜமாலுதீன்,
செயலாளர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS